**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No. 522 / 2018**

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மீனாட்சி | தொழில் | : என் தந்தை கடையில் வேலை |
| தந்தை பெயர் | : குமார். | சமயம் | : |
| கிராமம் | : அனந்தபுரம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 26 |

தேதி 23.01.2023

சாட்சியையும் எதிரிகளையும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியராஜ் Gr.1 - 1082 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் அனந்தபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் தந்தையின் கடையில் தந்தையுடன் கடையை பார்த்துகொள்கிறேன். அ.சா.1 குமார் என் தந்தை. ஆஜர் எதிரிகள் எங்கள் கடையில் வந்து காய்கறி வாங்கியபோது தகராறு செய்தவர்கள்.

2 28.052015 ம் தேதியன்று மாலை 4.00 மணிக்கு மேல் ஆஜர்எதிரிகளான இளங்கோவன், ராஜேந்திரன் ஆகிய இருவரும் எங்கள் கடைக்கு வந்து காய் கறி வாங்கினார்கள். வாங்கிய காய்கறிக்கு காசு தரமாட்டே,ன் என்று கூறி நான் யார் தெரியுமா என்று சொல்லி தெவிடியா என்று அசிங்கமாக திட்டினார்கள். இளங்கோவன் எனது துப்பாட்டாவை பிடித்து இழுத்தார். ராஜேந்திரன் எனது கையை பிடித்து இழுத்தார். நான் சத்தம் போட்டதில் பக்கத்தில் உள்ளவர்கள் என்னப்பா தகராறு என்று கேட்டார்கள். கேட்டவுடன் 2 பேரும் அனந்தபுரம் பஸ்டாப்பிற்கு சென்றுவிட்டார்கள். நான் என் அப்பாவிற்கு போன் பன்னி சொன்னேன். எங்க அப்பா அப்போது தக்காளி வாங்குவதற்காக செஞ்சிக்கு சென்றியிருந்தார். என் தந்தையும் போன் பன்னி சொன்னவுடன் திரும்பி வந்தார். ஆள் யார் என்று காட்டுமாறு என்னிடம் கேட்டார். நானும் பஸ் ஏறும் இடத்தில் நின்று கொண்டியிருந்த ஆஜர் எதிரிகளை அடையாளம் காட்டினேன். அப்போது

ஆஜர் எதிரிகள் இருவரும் டேய் தெவிடியா பையா என்று சொல்லி உன்னையும் வெட்டுவேன் உன் மகளையும் வெட்டுவேன் என்று சொன்னார்கள். அதன் பிறகு என் தந்தை அனந்தபுரம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார். போலிசார் அங்கு வந்து விசாரித்து இளங்கோவனையும், இராஜேந்திரனையும் கைது செய்தார்கள். என்னிடம் தகராறு செய்தபோது கடையில் காய்கறி வாங்க வந்தவர்கள் இருந்தார்கள். என் குடும்பத்தை சார்ந்த அண்ணா, அப்பா தகராரின் போது கடையில் இல்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

**3. எ** ங்கள் கடைக்கு உள்ளாக யாரும் வரமுடியாதா என்றால் வரமுடியும் . பிரஸ்சாக காய்கறி வேண்டும்போது உள்ளே வந்து எடுப்பார்கள். எங்கள் அனுமதியின் பேரில்தான் உள்ளே வந்து காய்கறி எடுப்பார்கள் என்றால் பழக்கமானவர்கள் உள்ளே வந்து காய்கறிகள் எடுப்பார்கள். கடைக்குள்ளாக இருக்கும்போது கடைக்கு முன் பகதியில் காய்கறி தட்டுகள் அடுக்கப்பட்டு வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். எடை போடும் தட்டு எனக்கு அருகில் இருக்கும் என்றால் எனக்கு பின்னால் இருக்கும்,. என் கடையில் காய்கறி வாங்க வந்து நின்றால் ரோடு பகுதியில் நிற்ப்பார்கள் என்றால் நிற்பார்கள். சைடிலும் வந்து நிற்பார்கள். எங்கள் கடையின் முகப்பு 3 அடிதான் உள்ள நிலையில் சைடில் இடம் ஏதும் இல்லாமல் ரோட்டின் நின்றுதான் வாங்குவார்கள் என்றால் சரியல்ல. எங்கள் கடைக்கும் பக்கத்து கடை,க்கும் இடையில் இடம் உள்ளது. எங்கள் கடை ப ஸேப்பில் உள்ளதால் சைடில் நிற்கமுடியும்,. ஆஜர் எதிரிகள் எங்கு நின்று வாங்கினார்கள் என்றால் ரோடு பக்கத்தில் இருந்துதான் வாங்கினார்கள்.

4. ஆஜர் எதிரிகள் இருவரும் தனித்தனியாக காய்கறிகள் வாங்கினாகளா என்றால் இல்லை. இருவரும் சேர்ந்துதான் ஒன்றாக வாங்கினாகள். காய்கறி வாங்கும் வரைக்கும் எந்த வாக்குவாதமும் ஏற்படவில்லை என்றால் ஏற்படவில்லை. எவ்வளவுக்கு காய்கறி கொடுத்து பணம் கேட்டேன் என்றால் 7 வருடம் ஆனதால் அந்த விவரம் ஞாபகம் இல்லை. காய்கறிகள் கேட்கும்போது நான் எடை போட்டு வாய்யாலே கணக்கு பன்னி தொகை கேட்பேன் என்றால் சரிதான் . பிள் போட்டு கேட்டாலும் பிள் எழுதி கொடுப்பேன். ஆஜர் எதிரிகளுக்கு வாயால் கணக்கு பன்னி சொன்னேன் என்றால் ஆமாம். எதிரிகள் கேரட் என்னிடம் கேட்காத நிலையில் நான் 1/4 கிலோ கேரட்டை சேர்த்து போட்டு அதற்கு மட்டும் 40 ரூபாய் கேட்டதாக

சொல்கிறார்கள் என்றால் 40 ரூபாய் கேட்டதாக சொல்வது உண்மையல்ல. மொத்தமாக காய் கறி வாங்கியதற்கு மொத்தமாக தொகையைதான் சொன்னேன். எவ்வளவு ரூபாய்க்கு காய் கறி கொடுத்தேன். அதற்கு எவ்வளவு தொகை கேட்டேன் என்ற விவரத்தை என் தந்தையிடம் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லைதான். போலிசார் என்னை கடையில் வந்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிஸ் ஸ்டேஷனிலும் என்னை விசாரித்தார்கள். காய்கறி எவ்வளவு கொடுத்து எவ்வளவு கேட்டேன் என்ற விவரத்தை போலிசாரிடமாவது சொன்னேனா என்றால் சொல்லியிருப்பேன். தற்போது எனக்கு ஞாபகம் வரவில்லை.

5. எனது தந்தை கடைக்கு வந்தவுடன் விவரத்தை சொல்லி காவல் நிலையத்திற்கு செல்லாமல் ஏன் பேரூந்து நிறுத்திற்கு சென்றோம் என்றால் ஆள் யார் என்று அடையாளம் காட்டுவதற்காக சென்றேன். பேரூந்து நிறுத்தத்தில் சென்று ஆஜர் எதிரிகளிடம் தகராறு ஏற்பட்டதா என்றால் நாங்கள் எதுவும் பேசவில்லை. எதிரிகள் உடைய பெயர், முகவரி, யார் சொன்னது என்றால் எனக்கு தெரியவில்லை. என் தந்தைதான் விசாரித்தார்.

6. எங்கள் கடைக்கு எதிரில் என்ன கடை உள்ளது என்றால் வெங்கடஸ்வரா துணி கடை உள்ளது. கடையின் வலது புறத்தில் கூல்டிரிங்ஸ் கடையும், இடது புறத்தில் நகை கடையும் உள்ளது. எங்கள் கடையை ஒட்டி எவ்வளவு கடை இருக்கும் என்றால் நிறைய கடைகள் வரிசையாக உள்ளது. கடையில் எதிரிகள் நான் கூறுவது போல் பிரச்சனை செய்தபோது யாரும் வந்து கேட்டவில்லை என்றால் அவரவர்கடையில் வியாபாரம் பார்த்துகொண்டியிருந்தார்கள். நான் சத்தம் போட்ட போதும் யாரும் கேட்கவில்லை என்றால் அருகில் இருந்தவர்கள் கேட்டார்கள். கடைக்காரர்கள் வரவில்லை,. அருகில் இருந்தவர்கள் யார் யார் என்று சொல்லமுடியுமா என்றால் கடைக்கு நிறைய பேர்கள் வந்து செல்வார்கள். யார் என்று ஞாபகம் இல்லை.

7. புதுப்பேட்டை நாராயணன் என்பவரை தெரியுமா என்றால் ஆள் பார்த்தால் எனக்கு தெரியும். பெயர் சொன்னால் தெரியும். கீழ் மலை கோவிந்தன் எனக்கு தெரியுமா என்றால் கடைக்கு காய் வாங்க வந்தவர். புதுபேட்டை கோவிந்தசாமி யார் என்று தெரியுமா என்றால் பெயர் தெரியவில்லை. ஆளை பார்த்தால் தெரியும்.

8. நான் கூறுவதுபோல் சம்பவம் நடந்திருந்தால் அருகில் கடையில்

இருந்தவர்கள் வந்து எதிரிகளை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்திருப்பார்கள் என்ற நிலையில் சம்பவம் உண்மை இல்லை என்றால் சரியல்ல. அருகில் கடை நடத்தியிருப்பவர்கள் காவல் நிலையத்திற்கு போன் மூலமாகவாது தகவல் சொல்லியிருப்பார்கள் என்றால் சொல்லமாட்டார்கள். என் கடை என்பதால் சொல்லமாட்டார்களா என்றால் யார் கடையாக இருந்தாலும் போன் பன்னி சொல்லியிருக்கமாட்டாங்க.

8. கேரட் கேட்காத போது ஏன் கேரட்டை சேர்த்து கொடுத்தாய் என்று எதிரிகள் கேட்டபோது நான் போடா நாய்யே என்று வயது மரியாதை கொடுக்காமல் நான் திட்டினேன் என்றால் நான் அவ்வாறு திட்டவில்லை. வாங்கிய காய்கறியை எதிரிகள் எடுத்து சென்றார்களா என்றால் எடுத்துசெல்லவில்லை. எனக்கு எதிராக எதிரிகள் புகார் கொடுத்துவிடுவார்கள் என்பதால் என் தந்தை பொய்யான புகாரை எதிரிக்கு எதிராக கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் எனக்கு பேச்சு வார்த்தை உண்டா என்றால் இல்லை. இன்னன்னா இன்னா என்று பேசுவோம். ஆஜர் எதிரிகள் எந்த ஊர் என்று தெரியுமா என்றால் சிற்றதூர் . இந்த பிரச்சணைக்கு முன்பாக என் கடையில் எதிரிகள் காய் கறிகள் வாங்கியுள்ளர்களா என்றால் இல்லை.

9. நான் இயல்பாகவே எங்கள் கடைக்கு வருபவர்களிடம் மரியாதை கொடுக்காமல் பேசுவேன் என்றால் இல்லை. மரியாதை குறைவாக பேசினால் எங்கள் கடைக்கு யாரும் வர மாட்டார்கள். சம்பவதன்று அருகில் உள்ளவர்கள் என்னைதான் திட்டினார்கள் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு போலிஸ் ஸ்டேசனுக்கு செல்லும் பழக்கத்தில் கையை பிடித்து இழுத்ததாகவும், துப்பட்டா பிடித்து இழுத்ததாகவும் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. நான் சொன்ன விவரத்தைதான் என் தந்தை புகாராக கொடுத்துள்ளார். நான் 12 ம் வகுப்பு படித்திருப்பதனால் புகாரை படித்து பார்த்துவிட்டு அதுகேற்றவாறு சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் கூறுவதுபோல் சம்பவம் நடந்திருந்தால் எவ்வளவுக்கு காய்கறிகொடுத்தேன். எவ்வளவு தொகை கேட்டேன் என்ற விவரத்தை என் தந்தையிடமும், போலிசார்யிடமும் சொல்லியிருப்பேன் என்றால் என் தந்தையிடம் சொல்லியிருப்பேன். எவ்வளவு தொகை என்று ஞாபகம் இல்லை. நடக்காத சம்பவத்தை பொறுத்து என் தந்தை கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான்

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.